# ஹியுமன் பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்புமருந்து

Human papillomavirus (HPV)

## பெற்றோருக்கான தகவல் ஏடு

**பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. (NSW) சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.**

நீங்கள் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு ஹியுமன் பப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு HPV-இற்கு எதிராக தடுப்பூசி அளிக்கப்பட நீங்கள் விரும்பவில்லை என்றால், ஒப்புதல் அளிக்க வேண்டாம்.

### கே. HPV என்பது என்ன மற்றும் அது எவ்வாறு பரவுகிறது?

மானிட பப்பிலோமா வைரஸ் (HPV) என்பது ஆண்களையும் பெண்களையும் தாக்கும் ஒரு பொதுவான வைரஸின் பெயராகும். இந்த வைரஸ் உள்ள ஒருவருடன் பாலுறவில் ஈடுபடும்போது பாலுறுப்புகள் தொடர்புபடுவதன் மூலம் HPV பரவுகிறது. இந்த வைரஸ் சருமத்திலுள்ள நுண்ணிய வெடிப்புகள் ஊடாகப் பயணிக்கின்றது. குருதி அல்லது வேறு உடல் திரவங்கள் ஊடாக அது பரவுவதில்லை. ஆணுறைகளைப் பொறுத்தளவில் அவை சகல பாலுறுப்புப் பகுதிகளையும் மறைக்காது என்பதால் அவை ஓரளவு பாதுகாப்பையே தருகின்றது.

எல்லா வகையான HPV-யும் தென்படக்கூடிய அறிகுறிகளை ஏற்படுத்தாது. HPV தொற்று உள்ள பலர் இது பற்றி அறியாமல் இருப்பர்.

சில HPV வகைகள் உடலின் எந்தப் பகுதியிலும் மருக்களை ஏற்படுத்தலாம். இதில் பிறப்புறுப்புப் பகுதி (வெளிப்புறப் பிறப்புறுப்பு, யோனி, கருப்பை வாய், ஆண்குறி, விதைப்பை, ஆசனவாய் மற்றும் பெரினியம்) அடங்கும். மருக்கள் பொதுவாக வலியற்றவை, ஆனால் சில நேரங்களில் அரிப்பு அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தும். மருக்களை ஏற்படுத்தும் HPV வகைகள் புற்றுநோயுடன் தொடர்புபடுத்தப்படாததால், அவை 'குறைந்த ஆபத்து' என்று அழைக்கப்படுகின்றன.

மற்ற HPV வகைகள் 'அதிக ஆபத்து' என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவை புற்றுநோய்க்கு முந்தைய உயிரணுக்கள் வளர வழிவகுக்கும். சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் இந்த உயிரணுக்கள் புற்றுநோயாக மாறலாம்.

பின்வருவன உட்பட, உலகெங்கிலும் உள்ள அனைத்து புற்றுநோய்களில் 5%-ஆனவற்றிருக்கு 'அதி ஆபத்தான HPV'-யே காரணமாகும்.

- கிட்டத்தட்ட எல்லா கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களும்
- 90% மலவாய்ப் புற்றுநோய்கள்
- 78% யோனி புற்றுநோய்கள்
- 60% வாய்த்தொண்டைப் புற்றுநோய்கள் (தொண்டையின் பின்புறம், நாக்கு மற்றும் உள்நாக்கில் ஏற்படும் புற்றுநோய்கள்)
- 25% யோனிப்புறப் புற்றுநோய்கள்
- 50% ஆண்குறிப் புற்றுநோய்கள்

ஆண்களுக்குத் தடுப்புமருந்தேற்றுவது ஆண்களுக்குரிய புற்றுநோய்களையும் பாலுறுப்பு மருக்களையும் தடுப்பதோடு, முக்கியமாக கர்ப்பப்பை வாய்ப் புற்று நோயிலிருந்து பெண்களைப் பாதுகாக்க உதவுகின்றது.

### கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால்

அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

### கே. எந்தத் தடுப்பு மருந்து பயன்படுத்தப்படுகிறது?

9 வகையான HPV (6, 11, 16, 18, 31, 33, 45, 52 மற்றும் 58) களுக்கு எதிரான தடுப்பை அளிக்கக் கூடிய HPV தடுப்பு மருந்து.

### கே. என் குழந்தைக்கு எத்தனை HPV 'டோஸ்'கள் தேவை?

எந்தவொரு HPV தடுப்பூசியின் ஒரு 'டோஸ்'அளவும் இரண்டு 'டோஸ்' வழங்கல்களின் அதே பாதுகாப்பை வழங்குகிறது என்று சர்வதேச ஆய்வு காட்டுகிறது. இந்த ஆதாரத்தின் அடிப்படையில், 2023-இல் ஒரு 'டோஸ்' HPV தடுப்பூசி அட்டவணைக்கு மாறுவதை 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு' (Australian Technical Advisory Group on Immunisation (ATAGI)) பரிந்துரை செய்துள்ளது.

கணிசமான அளவில் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள சில இளம் பருவத்தினருக்கு HPV தடுப்பூசியின் மூன்று 'டோஸ்'கள் பரிந்துரைக்கப்படுகின்றன. 3 'டோஸ்' அட்டவணையின்படி 'டோஸ்' 1 இற்கும் 'டோஸ்' 2 இற்கும் இடையே 2 மாத இடைவெளியும், 'டோஸ்' 2 இற்கும் 'டோஸ்' 3 இற்கும் இடையே 4 மாத இடைவெளியும் அவசியமாகும்.

'குறிப்பிடத்தக்க நோயெதிர்ப்பு குறைபாடு' என்பது பின்வறுவோரைக் குறிக்கும்:

- முதன்மை அல்லது இரண்டாம் நிலை நோயெதிர்ப்பு குறைபாடுகள் (B லிம்ஃபோசைட் நோய் எதிர்ப்பொருள் மற்றும் T லிம்ஃபோசைட் முழுமையான அல்லது பகுதி குறைபாடுகள்) உடையோர்
- HIV தொற்று உள்ளவர்கள்
- புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள்
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்
- 'தன்னெதிர்ப்பு' (autoimmune) நோயுடையோர்
- குறிப்பிடத்தக்க நோயெதிர்ப்புத் தடுப்பு சிகிச்சையில் ('அஸ்ப்ளேனியா' அல்லது 'ஹைப்போஸ்ப்ளேனியா' தவிர) உள்ளவர்கள்.

### கே. ஏற்கனவே ஒரு 'டோஸ்' எடுத்த இளம் பருவத்தினருக்கு என்ன செய்வது?

HPV தடுப்பூசியின் ஒரு 'டோஸ்'-ஐ ஏற்கனவே பெற்ற மாணவர்களுக்கு இனி இரண்டாவது 'டோஸ்' தேவையில்லை. அவர்கள் முழுமையாக தற்போது வரைக்குமான தடுப்பூசி இடப்பட்டவர்களாகக் கருதப்படுவர்.

**தடுப்பு மருந்தளிக்கப்பட்ட பெண்களுக்கு வழக்கமான கர்ப்பப்பை வாய்ப் பரிசோதனை (இது முன்பு என 'பெப் ஸ்மியர்ஸ்' அழைக்கப்பட்டது) அவசியமாகும், ஏனெனில் கர்ப்பப்பை வாய்ப் புற்றைத் தோற்றுவிக்கும் சகலவித HPV யிலிருந்தும் HPV தடுப்பு மருந்தேற்றம் பாதுகாப்பதில்லை. 25 வயதிற்கு மேற்பட்ட எப்போதும் அதிக பாலியல் செயற்பாடு உடைய பெண்கள், அவர்களின் HPV தடுப்பு மருந்தளிப்பின் தன்மை எத்தகையதாயினும், ஐந்தாண்டுக்கொரு முறை கர்ப்பப்பை வாய்ப் பரிசோதனையைச் செய்துகொள்ள வேண்டும்.**

### கே. யாருக்குத் தடுப்பூசி அளிக்கப்பட வேண்டும்?

7- ஆம் ஆண்டில் உள்ள அனைத்து மாணவ மாணவிகளும் துரித ஆங்கில மையங்களிலும் உள்ள 12 வயது முதலான அனைத்து மாணவ மாணவிகளும் HPV தடுப்பூசியின் ஒரு 'டோஸ்' அட்டவணையைப் பெற வேண்டும். மேலதிகத் தகவல்களுக்கு, உங்கள் உள்ளூர் பொது சுகாதாரத்துடன் **1300 066 055** என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்

### கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

HPV தடுப்புமருந்து பின்வருவோருக்குக் கொடுக்கப்படக் கூடாது:

- கர்ப்பம் தரித்துள்ள அல்லது தரித்திருக்கக் கூடுமான பெண்கள்
- முன்னர் தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- ஏதாவது தடுப்புமருந்துக் கூறுகளால் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள் (கீழே பட்டியலிடப்பட்டுள்ளது)
- நொதியம் காரணமாக அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளாகக் கூடியவர்கள்

### கே. இத்தடுப்பு மருந்து எந்தளவு பயனளிக்கக் கூடியது?

பெண்களில் 90 வீதமான கருப்பைவாய்ப் புற்று நோய்களை ஏற்படுத்தக் கூடிய அதி-ஆபத்தான HPV வகைகளுக்கெதிரான தடுப்பை இது அளிக்கிறது, அத்துடன் ஆண்களில் புற்று நோய்களை ஏற்படுத்தக்கூடிய மேலதிக HPV வகைகளுக்கெதிரான தடுப்பையும் இது அளிக்கிறது.

தடுப்பூசி கொடுக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு பின்பும் இன்னும் 100% இற்குக் கிட்டிய பாதுகாப்பை இத்தடுப்பூசி அளிக்கிறது என்று சமீபத்திய ஆராய்ச்சி காட்டுகிறது. 'தேசிய HPV தடுப்பூசித் திட்டம்' (பெண்களுக்கு 2007 இலும் மற்றும் ஆண்களுக்கு 2013 இலும்) அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து:

- தடுப்பூசிக்கு தகுதியான வயதினரில் அதியுயர் கர்ப்பப்பை வாய் அசாதாரண நிகழ்வுகள் கிட்டத்தட்ட 50% குறைந்துள்ளன.
- இளைஞர்களில் பிறப்புறுப்பு மருக்கள் (21 வயதுக்குட்பட்டவர்கள்) 90% குறைந்துள்ளது.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பொதுவாக 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியில் உருவாகுவதனால், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைக் குறைப்பதில் தடுப்பூசியின் பங்கு இன்னும் சில காலம் வரைத் தெளிவாகத் தெரியாது.

1991 ஆம் ஆண்டு 'தேசிய கர்ப்பப்பை வாய் பரிசோதனைத் திட்டம்' தொடங்கப்பட்டதிலிருந்தும் மற்றும் 2007 ஆம் ஆண்டில் 'தேசிய மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது முதலும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் நிகழ்வுகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

### கே. என் பிள்ளை வளரும்வரை நான் காத்திருந்தால் என்ன?

பிள்ளைகள் பாலியல் ரீதியில் செயற்படுவதற்கு முந்திய பதின்ம வயது நிலையில் கொடுத்தால்தான் HPV தடுப்பு மருந்து செயலூக்கமுடையதாக இருக்கும். உங்கள் குழந்தை பாடசாலையில் இருக்கும்போது அசல் ஒப்புதல் படிவத்தை நீங்கள் திருப்பி அனுப்புவதன் மூலம் மட்டுமே இந்த தடுப்பூசிகளை பாடசாலையில் வழங்க முடியும். உங்கள் குழந்தை வயதுவரும் வரை காத்திருக்க விரும்பினால், நீங்கள் உங்கள் GP - அல்லது தடுப்புமருந்தளிப்பு மருந்தாளர் (pharmacist immuniser) உடன் ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும். ஒரு GP அல்லது மருந்தாளர் (pharmacist) மூலம் தடுப்பூசி வழங்கப்பட்டால், தடுப்பூசி இலவசமாக இருக்கும், ஆனால் உங்களிடம் ஆலோசனைக் கட்டணம் ஒன்று அறவிடப்படலாம்.

### கே. HPV தடுப்பு மருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன?

தடுப்பு மருந்தில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன: நொதியம் (yeast), அலுமினியம் அட்ஜுவன்ட், சோடியம் குளோரைட், L-ஹிஸ்டிடைன், பொலிசோபேட் மற்றும் சோடியம் போரேட். தடுப்புமருந்து செயற்படுவதற்கு உதவியாக அல்லது ஒரு பேணியாகச் செயற்படு வதற்காக இச்சேர்க்கைகள் மிகச் சிறிய அளவில் உள்ளடக்கப்படுகின்றன.

### கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக'த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

### கே. தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. பொதுவாக ஊசிபோட்ட இடங்களில் வலி, வீக்கம், தோல் சிவத்தல் என்பன காணப்படும். தீவிரமான பக்க விளைவுகள் மிகவும் அரிது. HPV தடுப்பூசி வழங்கப்பட்டதைத் தொடர்ந்த நாட்களில் NSW பெற்றோர்களுடன் தொடர்புகொள்ளப்பட்டபோது 11% இலும் குறைவான மாணவர்கள் லேசான பக்க விளைவுகளை அனுபவித்ததாகவும், அதே நேரத்தில் 0.5% பேருக்கு மட்டுமே மருத்துவ உதவி தேவைப்பட்டதாகவும் அவர்கள் கூறினர். பக்க விளைவுகள் பற்றிய மேலதிகத் தகவல்கள், தடுப்பு மருந்து பற்றிய 'மருந்துகள் குறித்த நுகர்வோர் தகவல்கள்' (Consumer Medicine Information – CMI) - இன் பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கும் www.health.nsw.gov.au/schoolvaccination. தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

### கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்க முடியும். ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது மிக அரிதாக ஏற்படுகின்றது. பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

### கே. எனது மகளுக்கு 'கர்ப்பப்பை வாய் பரிசோதனை'அவசியமா?

ஆம். தடுப்பு மருந்தளிக்கப்பட்ட பெண்களுக்கு வழக்கமான கர்ப்பப்பை வாய்ப் பரிசோதனை (இது முன்பு என 'பெப் ஸ்மியர்ஸ்' அழைக்கப்பட்டது) அவசியமாகும், ஏனெனில் கர்ப்பப்பை வாய்ப் புற்றைத் தோற்றுவிக்கும் சகலவித HPV யிலிருந்தும் HPV தடுப்பு மருந்தேற்றம் பாதுகாப்பதில்லை.

25 வயதிற்கு மேற்பட்ட எப்போதும் அதிக பாலியல் செயற்பாடு உடைய பெண்கள், அவர்களின் HPV தடுப்பு மருந்தளிப்பின் தன்மை எத்தகையதாயினும், ஐந்தாண்டுக்கொரு முறை கர்ப்பப்பை வாய்ப் பரிசோதனையைச் செய்துகொள்ள வேண்டும்.

### கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் தடுப்புமருந்து கொடுக்க முடியும்.

### கே. தடுப்பு மருந்தளிக்க யாரெல்லாம் இணக்கமளிக்க முடியும் மற்றும் இணக்கத்தினை மீளப்பெற முடியுமா?

18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு மருந்தளிக்கப்படுவதற்கான இணக்கத்தை பெற்றோர்/ பாதுகாவலர்கள் மட்டுமே அளிக்க முடியும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தமக்குத் தடுப்பு மருந்தளிக்கத் தாமே இணக்கமளிக்கலாம், அத்தனுடன் இணைக்கப் படிவத்தைப் பூரணப் படுத்தி அதில் பெற்றோர்/ பாதுகாவலர்' என்ற இடத்தில் கையொப்பமிட வேண்டும். இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

### கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார்.

மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர்/பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

### கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்யவது?

HPV தடுப்பூசியை பாடசாலையில் பெறத் தவறினால், கூடிய விரைவில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சில பாடசாலைகள் மீண்டும் பெறுவதற்கான 'கேட்ச்-அப்' கிளினிக்குகளை நடத்தும், இல்லையெனில் பெற்றோர்கள் தங்கள் உள்ளூர் GP-யை அல்லது மருந்தாளரைத் (pharmacist) தொடர்பு கொண்டு தடுப்பூசியைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

### கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' www.servicesaustralia.gov.au/express-plus-mobile-apps என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி -
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809 -இல் அழைப்பதன் மூலம்.

### கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்).

உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் ‘நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே’ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு ‘ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே’ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

HPV தடுப்பு மருந்து பெறும் பெண் பிள்ளைகளை பொறுத்தளவில் – இணக்கப் படிவத்தில் ஒப்பம் இடுவதன் மூலம் உங்கள் பிள்ளையின் தகவல்களைத் ‘தேசிய கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் சோதனை’ப் பதிவேட்டுடன் எதிர்காலத்தில் இணைப்பதற்காக வெளிப்படுத்துவதற்கு நீங்கள் உடன்படுகிறீர்கள்.

### கே. பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை **1300 066 055** இல் தொடர்புகொள்வதன் மூலம்

# Human papillomavirus (HPV) vaccine
# Parent Information Sheet

October 2023 © NSW Health. SHPN (HP NSW) 230689-1-22

## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


220730-2-22

Tamil

# HPV தடுப்பு மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

### 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ __ / __ __ / 2 0 __ __

பால் ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/இன்டர்செக்ஸ்/குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

### 2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

### 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

HPV தடுப்பு மருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எனது குழந்தைக்கு HPV தடுப்பூசியின் ஒரு 'டோஸ்' இடப்படுவதற்கு நான் இதன்மூலம் ஒப்புதல் அளிக்கிறேன், மேலும் எதிர்காலத்தில் 'தேசிய கர்ப்பப்பை வாய் பரிசோதனைத் திட்டப் பதிவேட்டுடன்' (National Cervical Screening Program Register) இணைப்பதற்காக எனது குழந்தையின் உடல்நலத் தகவல்களை வெளியிட ஒப்புக்கொள்கிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'பெற்றோருக்கான தகவல்' ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம் JOHN SMITH)

வீட்டு முகவரி (உ.ம் 5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ 02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

# HPV மருந்தளிப்புப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

மருந்தினளவு 1

புயம்
- இடது
- வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

**தாதியின் குறிப்புகள்**

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்
- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

**பெற்றோர்/பாதுகாவலர்** HPV மருந்தளிப்புப் பதிவு

HPV மருந்தளிப்புப் பதிவு

மருந்தினளவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

புயம்
- இடது
- வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / __ __ __ __

மாதிரி
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# தொண்டை அழற்சி நோய் – ஏர்ப்பு வலி மற்றும் (dTpa) – கக்குவான் இருமல் தடுப்புமருந்து

Diphtheria, tetanus and pertussis (dTpa) vaccine

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

### உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு தொண்டை அழற்சி நோய் - ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு தொண்டை அழற்சி நோய் - ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் **விரும்புவதில்லை**யாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ **வேண்டாம்.**

## கே. தொண்டை அழற்சி நோய் - ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் என்பன என்ன?

**தொண்டை அழற்சி நோய்** எளிதில் பரவுகின்ற உயிராபத்து விளைவிக்கக்கூடிய ஒரு கிருமித் தொற்றாகும். இது தீவிரமான சுவாசப் பிரச்சினை, மாரடைப்பு, நரம்பு சேதம் ஆகியவற்றிற்குக் காரணமாகின்றது.

**ஏர்ப்பு வலி** எம்பது, நரம்புமண்டலத்தைப் பாதிக்கும் பெரும்பாலும் உயிராபத்தான ஒரு தீவிர நோயாகும். இந்நோயால் பீடிக்கப்பட்டவர் கடுமையான வலிதரும் தசையிறுக்கம், நடுக்கம், தாடை இறுக்கம் போன்றவற்றால் பாதிக்கப்படுவார். இதனால் ஏற்படும் சிக்கலான கோளாறுகளில் நுரையீரல் அழற்சி (நிமோனியா), எலும்பு முறிவுகள் (தசை பிடிப்புகளால்), சுவாசச் செயலிழப்பு மற்றும் மாரடைப்பு ஆகியவை அடங்கும்.

**பெர்ட்டஸ்ஸிஸ்** (கக்குவான் இருமல்) என்பது தீவிரமாகத் தொற்றக்கூடிய பக்ரீரியா நோயாகும். இது தொடர்ச்சியான இருமலை எற்படுத்துகின்றது. பதின்ம வயதினரும் வளர்ந்தோரும் 3 மாதங்கள் வரை எரிச்சலூட்டும் இருமலால் பாதிக்கப்படுகின்றனர். தீவிரமான தொடர் இருமலானது வாந்தி, மார்பெலும்பு முறிவு, சிறிய இரத்தக் குழாய்களில் வெடிப்பு, குடலிறக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம். குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்களில் நிமோனியா, வலிப்புத்தாக்கங்கள் மற்றும் மூளைப்பாதிப்பு (ஹைபோக்சிக் என்செபலோபதி) ஆகியவை அடங்கும்.

## கே. தொண்டை அழற்சி நோய் - ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் எவ்வாறு பரவுகின்றன?

**தொண்டை அழற்சி நோய்** தொற்றுக்கு ஆளானவர்களின் வாய், மூக்கு, தொண்டை அல்லது சருமம் ஆகியவற்றில் கிருமிகள் வாழ்கின்றன. தொற்றுக்கு ஆளான ஒருவர் இருமிய அல்லது தும்மிய பின்னர் அக்காற்றைச் சுவாசிப்பதன் மூலம் ஒருவர் தொண்டை அழற்சி நோயைப் பெறமுடியும். தொற்றுக்கு ஆளான ஒருவரின் வாய், மூக்கு தொண்டை அல்லது சருமம் ஆகியவற்றிலிருந்து வெளியேறிய கழிவுகளுடன் ஒருவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுவதன் மூலமும் தொண்டை அழற்சி தொற்றுக்கு ஆளாக முடியும்.

**ஏர்ப்பு வலி** மண்ணில் காணப்படும் கிருமிகளால் ஏற்படுகின்றது. சிறிய காயங்களின் பின்னர் (சிலவேளை சருமத்தில் ஏற்படும் கவனிக்கப்படாத சிறிய சிராய்ப்புகள் மண், புழுதி அல்லது எரு முதலியவற்றால் தொற்றுக்கு ஆளாதல்) சிறிய காயங்களின் அல்லது பாரிய காயங்களின் பின்னர் இது ஏற்படலாம்.

இருமல் அல்லது தும்மலினால் சிதறும் துளிகளினால் **கக்குவான் இருமல்** பிறருக்குப் பரவுகின்றது. கக்குவான் இருமல் தொற்றுக்குச் சிகிச்சை பெறாத ஒருவர் இருமல் தொடங்கி 3 வாரங்கள் வரை அதைப் பிறருக்குப் பரப்பலாம்.

## கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

## கே. இத்தடுப்பு மருந்து எந்தளவு பயனளிக்கக் கூடியது?

இத்தடுப்பு மருந்து தொண்டை அழற்சி நோய் மற்றும் ஏர்ப்பு வலியைத் தடுப்பதில் காத்திரமான பாதுகாப்பை வழங்குகின்றது அத்துடன் கக்குவான் இருமலைத் தடுப்பதில் சுமார் 80% காத்திரமானது.

## கே. எனது பிள்ளை பாதுகாக்கப்பட எத்தனை அளவை தடுப்பு மருந்துகள் அவசியம்?

தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் ஆகியவற்றிலிருந்து இளம் பருவத்தினரைப் பாதுகாப்பதற்கு ஒரு தடவை dTpa தடுப்புமருந்து தேவையானது.

## கே. யாருக்கு நோய்த்தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்?

தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமலுக்கு எதிரான பாதுகாப்பைப் பெற சகல பதின்ம வயதினரும் ஒரு வேளை dTpa தடுப்பு மருந்தைப் பெற வேண்டும். குழந்தை பருவத்தில் கொடுக்கப்பட்ட முந்தைய தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி மற்றும் கக்குவான் இருமல் தடுப்பூசிகளுக்குப் பிறகு இந்த செயலூக்கித் தடுப்பு மருந்தினை பதின்ம வயதினருக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக வழங்க வேண்டியது அவசியம். கடந்த காலத்தில் தொண்டை அழற்சி - ஏர்ப்பு வலி தடுப்பு மருந்து (ADT) பெற்ற மாணவர்கள் கக்குவான் இருமலுக்கெதிராகவும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள dTpa தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

## கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

dTpa தடுப்புமருந்தைப் பின்வருவோருக்குக் கொடுக்கக்கூடாது:

- முன்னர் இத்தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- ஏதாவது தடுப்புமருந்துக் கூறுகளால் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள் (கீழே பட்டியலிடப்பட்டுள்ளது)

## கே. என் பிள்ளை வளரும்வரை நான் காத்திருந்தால் என்ன?

உங்கள் பிள்ளை துரித ஆங்கில மையத்தில் அல்லது 7 ஆம் ஆண்டில் இருக்கும்போது கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் படிவத்தை நீங்கள் திருப்பி அனுப்புவதன் மூலம் மட்டுமே டி.டி.பி.ஏ (dTpa) தடுப்பூசி பள்ளியில் வழங்கப்பட முடியும். உங்கள் குழந்தை வயதுவரும் வரை காத்திருக்க விரும்பினால், நீங்கள் உங்கள் GP - உடன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

## கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக' த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

## கே. தடுப்புமருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன?

தடுப்புமருந்தில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன: அலுமினியம் ஹைட்றொக்சைட், போஸ்பேட், சிறிதளவு போமல்டிஹைட், பொலிசோபேட் 80 மற்றும் கிளைசின், மேலும் உற்பத்தியின் போது இத்தடுப்பூசி, மாட்டிறைச்சி நிணநீர் புரதம் (bovine) இலிருந்து பெறப்பட்ட பொருட்களோடு தொடர்புபட்டுள்ளது.

## கே. தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. வழமையாக ஊசிபோட்ட இடத்தில் தோல் சிவத்தல், வலி, வீக்கம் அல்லது காய்ச்சல் என்பன காணப்படும். தீவிரமான பக்க விளைவுகள் மிக அரிது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய 'நுகர்வோர் மருந்து தகவல்' இல் கிடைக்கும். தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும். **ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது *மிக அரிதாக* ஏற்படுகின்றது.** பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

## கே. எனது பிள்ளை குழந்தையாக இருந்த சமயத்தில் பழைய Triple Antigen அல்லது DTP தடுப்பு மருந்தேற்றம் வழங்கப்பட்ட போது கடுமையான பக்க விளைவுகள் ஏற்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

முன்னைய தடுப்பு மருந்தேற்றத்திற்குப் பிறகு உடனே கடுமையான ஒவ்வாமை அல்லது அனபிலக்ஸிஸ் ஏற்பட்டிருந்தாலன்றி dTpa தடுப்பு மருந்தேற்றம் உங்கள் பிள்ளைக்குப் பாதுகாப்பானதே.

## கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் dTpa தடுப்புமருந்து கொடுக்க முடியும்.

## கே. தடுப்பு மருந்தளிக்க யாரெல்லாம் இணக்கமளிக்க முடியும் மற்றும் இணக்கத்தினை மீளப்பெற முடியுமா?

18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு மருந்தளிக்கப்படுவதற்கான இணக்கத்தை பெற்றோர் / பாதுகாவலர்கள் மட்டுமே அளிக்க முடியும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தமக்குத் தடுப்பு மருந்தளிக்கத் தாமே இணக்கமளிக்கலாம், அத்தனுடன் இணைக்கப் படிவத்தைப் பூரணப் படுத்தி அதில் பெற்றோர் / பாதுகாவலர்' என்ற இடத்தில் கையொப்பமிட வேண்டும். இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

## கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர் / பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

## கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்யவது?

உங்கள் உள்ளூர் வைத்தியரை அணுகி தடுப்பு மருந்தேற்றம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்க.

## கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி - www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

## கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

## பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

September 2022 © NSW Ministry of Health. SHPN (HP NSW) 220728-1-22

Tamil

# தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி, பெர்ட்டஸ்ஸிஸ் (dTpa) மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

## 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ / __ / 2 0 __ __

பால்: ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/ இன்டர்செக்ஸ்/ குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

## 2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

## 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி மற்றும் பெர்ட்டஸ்ஸிஸ் (dTpa) தடுப்புமருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எனது பிள்ளைக்கு தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி மற்றும் பெர்ட்டஸ்ஸிஸ் (dTpa) தடுப்பு மருந்தின் ஒரு டோஸ் அளவையைப் பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'பெற்றோருக்கான தகவல்' ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம்JOHN SMITH)

வீட்டு முகவரி(உ.ம் 5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

✕

திகதி __ / __ / 2 0 __ __

மாதிரி மட்டுமே
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

NSW GOVERNMENT

## dTpa மருந்தளிப்புப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

 

### அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம் ____________

தாதியின் கையொப்பம் ✕ ____________

திகதி __ __ / __ __ / 2 0 __ __

### தாதியின் குறிப்புகள்

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

# **பெற்றோர்/பாதுகாவலர்** தொண்டை அழற்சி நோய், ஏர்ப்பு வலி அல்லது பெர்ட்டஸ்ஸிஸ் (dTpa) மருந்தளிப்புப் பதிவு

## dTpa மருந்தளிப்புப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

 

### அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம் ____________

தாதியின் கையொப்பம் ✕ ____________

திகதி __ __ / __ __ / 2 0 __ __

### தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

### ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT

மாதிரி மட்டும்
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# சின்னமுத்து (சின்னம்மை) தடுப்புமருந்து

NSW GOVERNMENT

Varicella (chickenpox) vaccine

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

### உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு சின்னமுத்து தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு சின்னமுத்து தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் விரும்புவதில்லையாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ வேண்டாம்.

## கே. சின்னமுத்து (சின்னம்மை) என்பது என்ன?

சின்னம்மையானது தொடுவதனால் பரவும் ஒரு தொற்று நோயாகும். 'வரிசெல்லா –சொஸ்டர் வைரஸ்' இதற்குக் காரணமாகும். பொதுவாக ஆரோக்கியமான குழந்தைகளைப் பொறுத்தவரை இது ஒரு குறுகியகால நோயாகும். மிதமான காய்ச்சல், மூக்கு ஒழுகுதல், பொதுவான பலவீனம், கொப்புளங்கள் என்பன இதன் அறிகுறிகள். வளர்ந்தோரைப் பொறுத்தவரை இது தீவிரமானது. நோய்த்தடுப்பு ஆற்றல் இல்லாதவர்களைப் பொறுத்தவரை இது தீவிரமான, உயிராபத்தான நோயாக மாறலாம். 4,000 பேரில் ஒருவர் திடீர்த் தசை இயக்க (கடுமையான சிறுமூளை அட்டாக்ஸியா) இழப்பை எதிர்கொள்வர், 100,000 பேரில் ஒருவருக்கு மூளை வீக்கம் (என்செபலிடிஸ்) ஏற்படும். கர்ப்பமுற்ற காலத்தில் ஏற்படும் இத்தொற்று தோல் வடு மற்றும் மூட்டுக் குறைபாடுகள் உட்பட்ட பிறவிக் கோளாறுகளை குழந்தையில் ஏற்படுத்தலாம்.

## கே. சின்னம்மை எவ்வாறு பரவுகிறது?

நோயின் ஆரம்பத்தில் சின்னம்மை இருமலின்மூலம் பரப்பப்படுகின்றது. நோயின் பிற்பகுதியில் கொப்புளங்களில் உள்ள திரவத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் அந்த வைரஸ் பரப்பப்படுகின்றது. முன்னர் ஒருபோதும் சின்னம்மைக்கு ஆளாகாதவர்களை அல்லது நோய்த்தடுப்புப் பெறாதவர்களைப் பொறுத்தவரை இத்தொற்று தொடுகையினால் விரைவாகப் பரவக்கூடியது. தொற்று ஏற்பட்ட ஒரு அல்லது இரு நாட்களுக்குப் பிறகு தோலில் சிவப்பு அடையாளங்கள் தோன்றும்போதும் (அதாவது மூக்கு வடியும் கட்டத்தில்) மற்றும் ஐந்து நாட்கள் வரைக்கும் (கொப்புளங்கள் காய்ந்து கனமான மேல் தோலினால் அவை மூடப்படும்போதும்) இந்த நோய் மற்றவர்களுக்குத் தொற்றலாம்.

## கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

## கே. இத்தடுப்பு மருந்து எந்தளவு பயனளிக்கக் கூடியது?

ஒரு அளவை சின்னம்மை தடுப்பு மருந்தளிப்பதானது 80 - 85% சின்னம்மையைத் தடுப்பதில் மிகவும் காத்திரமானது, மேலும் இந்த நோய் தீவிரமாக இருந்தால் இது மிகவும் செயல்திறனோடு அதை எதிர்க்கும்.

## கே. யாருக்கு நோய்த்தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்?

14 வயது வரையுள்ள மாணவர்கள் தாம் ஏற்கனவே **சின்னம்மை தடுப்பு மருந்தைப் பெற்றிருந்தாலன்றி** (பொதுவாக 18 மாத வயதில்) **அல்லது சின்னம்மை நோய் வந்திருந்தால்**, அவர்களுக்கு ஒரு வேளைக்கான சின்னம்மைத் தடுப்பு மருந்து வழங்கப்பட வேண்டும். 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதையுமுடைய மாணவர்களுக்கு இரண்டு 'வேளை சின்னம்மை தடுப்பு மருந்து, குறைந்தது 1-2 மாத இடைவெளியில் அவர்களது மருத்துவர் மூலம் வழங்கப்பட வேண்டும்.

## கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

சின்னமுத்துத் தடுப்புமருந்தைப் பின்வருவோருக்குக் கொடுக்கக்கூடாது:

- முன்னர் தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- ஏதாவது தடுப்புமருந்துக் கூறுகளால் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள் (அடுத்த பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன)
- கர்ப்பிணிகள் (தடுப்புமருந்து ஏற்றி 28 நாட்கள்வரை கர்ப்பம் தவிர்க்கப்பட வேண்டும்)
- முந்திய 12 மாதங்களுள் இரத்த மாற்றுச் சிகிச்சை பெற்றவர்கள்/இம்முனோ குளோபிலின் ஊசிமருந்தேற்றியவர்கள்
- கடந்த 4 வாரங்களுக்குள் ஒரு உயிர்த் தடுப்புமருந்து பெற்றவர்கள் (உம். MMR (சின்னம்மை, அம்மைக்கட்டு, ருபெல்லா), BCG (காசநோய்), அல்லது மஞ்சட் காய்ச்சல்)
- நோய்த்தடுப்பு ஆற்றல் அற்றவர்கள். உ.ம்
    i. HIV/AIDS உள்ளவர்கள்
    ii. கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை அல்லது அதிக அளவு வாய்மூலமான கோட்டிகொஸ்டெறோயிட்ஸ் மருந்து போன்ற அதிக அளவு நோய்த்தடுப்பு ஆற்றல் குறைவிற்கான சிகிச்சை பெறுபவர்கள்
    iii. நிணநீர்க் கட்டிகள், இரத்தப் புற்று அல்லது வினயமான புற்றுகள் உட்பட தீவிர நோய்த்தடுப்பாற்றல் குறைபாடு உள்ளவர்கள்.

## கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும். **ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது *மிக அரிதாக* ஏற்படுகின்றது.** பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

## கே. என்னிடம் பதிவுகள் இல்லாதிருந்தால் அல்லது எனது பிள்ளைக்கு ஏற்கனவே சின்னம்மை நோய் ஏற்பட்டிருந்ததா அல்லது ஒரு 'சின்னமுத்து' தடுப்புமருந்தேற்றம்' வழங்கப்பட்டுள்ளாதா என எனக்கு ஞாபகம் இல்லையாயின் நான் என்ன செய்வது?

கடந்த காலத்தில் சின்னம்மை நோய் ஏற்பட்டிருந்தது பற்றி அறியாதிருந்தாலும் அல்லது ஏற்கனவே சின்னம்மை' தடுப்புமருந்து வழங்கப்பட்டதுபற்றி சான்றுகள் இல்லாதிருந்தாலும் பிள்ளைகளுக்கும் வளர்ந்தோருக்கும் பாதுகாப்பான விதத்தில் 'சின்னமுத்து' தடுப்புமருந்தேற்றம்' வழங்கப்பட முடியும்.

## கே. சின்னம்மைத் தடுப்புமருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன?

தடுப்பு மருந்தில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன: சுக்ரோஸ், ஹைட்ரோலைஸ்ட் போர்சைன் ஜெலட்டின், யுரியா, மொனோசோடியம் க்லுட்டாமேட், MRC-5 செல்களின் எச்சக் கூறுகள், சிறிதளவு நியோமைசின் மற்றும் கால்நடைக் குருதிநீர் (bovine serum). தடுப்புமருந்து செயற்படுவதற்கு உதவியாக அல்லது ஒரு பேணியாகச் செயற்படுவதற்காக இச்சேர்க்கைகள் தடுப்புமருந்தில் மிகச் சிறிதளவு சேர்க்கப்படுகின்றன. உற்பத்தியின் போது இந்தத் தடுப்பூசி, மாட்டிறைச்சி நிணநீர் புரதம் (bovine) இலிருந்து பெறப்பட்ட பொருட்களோடு தொடர்புபட்டுள்ளது.

## கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக' த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

## கே. சின்னம்மைத் தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. வழமையாக ஊசிபோட்ட இடத்தில் தோல் சிவத்தல், வலி, வீக்கம் அல்லது காய்ச்சல் என்பன காணப்படும். தீவிரமான பக்க விளைவுகள் மிக அரிது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய 'நுகர்வோர் மருந்து தகவல்' இல் கிடைக்கும். தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர் / பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

**சின்னமுத்து தடுப்புமருந்து ஏற்றப்படும் மாணவிகள் அதிலிருந்து 28 நாட்கள் வரை கருவுறக் கூடாது.**

## கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் சின்னம்மைத் தடுப்புமருந்து கொடுக்க முடியும்.

## கே. என் இணக்கத்தை நான் மீளப்பெற முடியுமா?

இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

## கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்வது?

உங்கள் உள்ளூர் வைத்தியரை அணுகி தடுப்பு மருந்தேற்றம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்க.

## கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி - www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

## கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

## பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

September 2022 © NSW Ministry of Health. SHPN (HP NSW) 220733-1-22

Tamil

# சின்னமுத்து (சின்னம்மை) மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

## 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ __ / __ __ / 2 0 __ __

பால் ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/ இன்டர்செக்ஸ்/ குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

## 2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

## 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

சின்னமுத்து தடுப்புமருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எனது பிள்ளைக்கு சின்னமுத்து தடுப்புமருந்தினை ஒரு முறை பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'பெற்றோருக்கான தகவல்' ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம் JOHN SMITH)

வீட்டு முகவரி (உ.ம் 5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ 02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

மாதிரி மட்டும்
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

NSW GOVERNMENT

220733-2-22

## சின்னமுத்து (சின்னம்மை) தடுப்புமருந்துப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

### அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24மணி நேரம்) ___ : ___

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி ___ / ___ 2 0 ___

### தாதியின் குறிப்புகள்

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

## பெற்றோர்/பாதுகாவலர் சின்னமுத்து (சின்னம்மை) தடுப்புமருந்துப் பதிவு

### சின்னமுத்து (சின்னம்மை) தடுப்புமருந்துப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

### அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24மணி நேரம்) ___ : ___

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி ___ / ___ 2 0 ___

### தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

### ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT

# ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்து

Hepatitis B vaccine

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

### உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் **விரும்புவதில்லை**யாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ **வேண்டாம்**.

### கே. ஹெப்படைடிஸ் B நோய் என்பது என்ன?

ஹெப்படைடிஸ் B என்பது காய்ச்சல், மஞ்சள் காமாலை மற்றும் பொதுவான சுகயீனம் போன்ற நோய் அறிகுறிகளத் தோற்றுவிக்கும் ஒரு வைரஸ் நோயாகும். இது ஈரல் சிதைவு மற்றும் ஈரல் புற்றுநோயிற்கு இட்டுச்செல்லக் கூடும். சிலர் ஹெப்படைடிஸ் B நோயிற்கு உட்பட்டிருந்தாலும் தமக்கு அத்தொற்று ஏற்பட்டிருப்பதை அவர்கள் அறியாதிருக்கவும் கூடும். தமக்குத் தெரியாமலேயே அவர்கள் அந்நோயை பிறருக்குக் கட த்தவும் கூடும்.

### கே. ஹெப்படைடிஸ் B எவ்வாறு பரவுகிறது?

- நோய்த்தொற்றுள்ள தாயிடமிருந்து பிரசவத்தின்போதும் தாய்ப்பாலூட்டல் மூலமும் குழந்தைக்குக் கடத்தப்பட முடியும்.
- ஒரு பிள்ளையிடமிருந்து இன்னொரு பிள்ளைக்கு, பொதுவாக திறந்த புண்கள், காயங்களைத் தொடுவதன் மூலம்
- பாதுகாப்பற்ற உடலுறவு
- ஊசிக் குத்துக் காயம்
- நோய்நுண்மங்கள் அழிக்கப்படாத கருவிகள் மூலம் பச்சை குத்துதல் மற்றும் அணிகலன்களுக்காக உடலைத்துளைத்தல்
- ஊசிபோடும் கருவிகளைப் பகிர்ந்துகொள்ளல்

### கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

### கே. இத்தடுப்பு மருந்து எந்தளவு பயனளிக்கக் கூடியது?

ஹெப்படைடிஸ் B தொற்றுவதிலிருந்து தடுப்பதில் ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்து காத்திரமான பாதுகாப்பை வழங்குகின்றது.

### கே. இத் தடுப்பு மருந்து முறையில் எத்தனை அளவைகள் மருந்தேற்றங்கள் தேவைப்படுகின்றன?

'துரித ஆங்கிலக் கல்வி' நிலையங்களில் ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்து இரண்டு மருந்தேற்றங்கள் என்ற அடிப்படையில், முதலாவது மருந்தேற்றம் வழங்கப்பட்டு 4-6 மாதங்களில் இரண்டவது மருந்தேற்றம் வழங்கப்படும்.

### கே. ஒரு 'அளவை ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்தேற்றம்' மட்டும் வழங்கப்பட்டால் என் பிள்ளை ஹெப்படைடிஸ் B- யிற்கெதிரான பாதுகாப்பைப் பெறுமா?

இல்லை. ஹெப்படைடிஸ் B- யிற்கெதிரான பாதுகாப்பைப் பெற பதின்ம வயதினருக்கு (11-15 இற்கு இடைப்பட்ட வயதினர்) 2 அளவைகள் வளர்ந்தோருக்கான தடுப்பு மருந்தேற்றம் அவசியம்.

### கே. யாருக்கு நோய்த்தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்?

**11 - 15 வயதுடைய** சகல மாணவர்களுக்கும் தாம் குழந்தைகளாக அல்லது சிறுவர்களாக இருந்தபோது ஒரு தடுப்பு மருந்தேற்றத்தைப் பெற்றிருந்தாலன்றி, **2 வளர்ந்தோருக்கான 'அளவைகள்'** ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்தேற்றம் வழங்கப்பட வேண்டும்.

**16 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய** மாணவர்கள் **3 குழந்தை மருத்துவம் சார்ந்த 'அளவைகள்'** தடுப்பு மருந்தேற்றத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முதல் 2 அளவைகளும் பாடசாலையில் வழங்கப்படக்கூடும், மேலும் அதன் பின்பு தடுப்பு மருந்தளிப்பதை GP மூலம் பூரணப்படுத்துவதற்காக அவருக்கு ஒரு கடிதமும் வழங்கப்படும்.

## கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்து பின்வருவோருக்கு வழங்கப்படக் கூடாது.

- முன்னர் தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- ஏதாவது தடுப்புமருந்துக் கூறுகளால் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- கர்ப்பிணிகள்

## கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக' த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

## கே. ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன ?

தடுப்புமருந்தில் அது செயற்பட உதவக்கூடிய அலுமினியம் ஹய்ட்ரொக்ஸைட்டும், சிலவேளை நொதியம் (yeast) புரோட்டீன்களும் உள்ளடங்கியிருக்கலாம், மேலும் உற்பத்தியின் போது இத்தடுப்பூசி, மாட்டிறைச்சி நிணநீர் புரதம் (bovine) இலிருந்து பெறப்பட்ட பொருட்களோடு தொடர்புபட்டுள்ளது.

## கே. ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. வழமையாக ஊசிபோட்ட இடத்தில் தோல் சிவத்தல், வலி, வீக்கம் அல்லது காய்ச்சல் என்பன காணப்படும். தீவிரமான பக்க விளைவுகள் மிக அரிது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய 'நுகர்வோர் மருந்து தகவல்' இல் கிடைக்கும். தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும். **ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது *மிக அரிதாக* ஏற்படுகின்றது.** பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

## கே. என்னிடம் பதிவுகள் இல்லாதிருந்தால் அல்லது எனது பிள்ளைக்கு ஏற்கனவே ஒரு 'ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்தேற்றம்' வழங்கப்பட்டுள்ளாதா என எனக்கு ஞாபகம் இல்லையாயின் நான் என்ன செய்வது?

மற்றொரு 'ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்தேற்ற'த்தை உங்கள் பிள்ளைக்கு வழங்குவதே பாதுகாப்பானதாகும்.

## கே. எனது குழந்தைக்கு 'Hib' தடுப்பு மருந்தேற்றம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது எனது பிள்ளையை 'ஹெப்படைடிஸ் B' யிலிருந்து பாதுகாக்குமா ?

இல்லை. 'ஹெமொஃபிலியஸ் இன்ஃப்ளுவென்ஸா B வகைத்' தொற்றிலிருந்து மட்டுமே Hib தடுப்பு மருந்தேற்றம் பாதுகாப்பளிக்கும். இது குழந்தைகளுக்கு 6 வாரங்கள், 4 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 18 மாத வயதில் வழங்கப்படுகின்றது. இது உங்கள் பிள்ளைக்கு 'ஹெப்படைடிஸ் B'- யிற்கெதிரான பாதுகாப்பை வழங்காது.

## கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர் / பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

## கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்து கொடுக்க முடியும்.

## கே. தடுப்பு மருந்தளிக்க யாரெல்லாம் இணக்கமளிக்க முடியும் மற்றும் இணக்கத்தினை மீளப்பெற முடியுமா?

18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு மருந்தளிக்கப்படுவதற்கான இணக்கத்தை பெற்றோர் / பாதுகாவலர்கள் மட்டுமே அளிக்க முடியும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தமக்குத் தடுப்பு மருந்தளிக்கத் தாமே இணக்கமளிக்கலாம், அத்தனுடன் இணைக்கப் படிவத்தைப் பூரணப் படுத்தி அதில் பெற்றோர் / பாதுகாவலர்' என்ற இடத்தில் கையொப்பமிட வேண்டும். இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

## கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்வது?

உங்கள் உள்ளூர் வைத்தியரை அணுகி தடுப்பு மருந்தேற்றம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்க.

## கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி - www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

## கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

## பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

September 2022 © NSW Ministry of Health. SHPN (HP NSW) 220729-1-22

## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


220729-2-22

Tamil

# ஹெப்படைடிஸ் B மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

## 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ / __ / 2 0 __

பால் ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/இன்டர்செக்ஸ்/குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

## 2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

## 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

ஹெப்படைடிஸ் B தடுப்பு மருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எனது பிள்ளைக்கு ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்தினை 2 முறை பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'பெற்றோருக்கான தகவல்' ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம்JOHN SMITH)

வீட்டு முகவரி(உ.ம்5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

✕

திகதி __ / __ / 2 0 __

மாதிரி மட்டும்
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

## ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**மருந்தினளவு 1**

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

**மருந்தினளவு 2**

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

### தாதியின் குறிப்புகள்

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

## பெற்றோர்/பாதுகாவலர் ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துப் பதிவு

### ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துப் பதிவு — மருந்தினளவு 1

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

### ஹெப்படைடிஸ் B தடுப்புமருந்துப் பதிவு — மருந்தினளவு 2

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

# சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா (MMR) முக்கூட்டு தடுப்பூசி

Measles, mumps and rubella (MMR) vaccine

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

### உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் **விரும்புவதில்லை**யாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ **வேண்டாம்**.

## கே. சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா என்பவை யாவை?

காய்ச்சல், இருமல் மற்றும் தோல் அரிப்பு போன்றவற்றைத் தோற்றுவிக்கும் கடுமையான தொற்று நோய்க் கிருமியே **சின்னமுத்து** ஆகும். நிமோனியா, வயிற்றுப்போக்கு மற்றும் நடுத்தர காது நோய்த்தொற்றுகள் ஆகியவை அடிக்கடி ஏற்படும் சிக்கல்களில் அடங்கும். ஒவ்வொரு 1,000 பேரில் ஒருவருக்கு மூளை அழற்சி ஏற்படுகிறது, மேலும் இவர்களில் 10-15% இறப்பர், மற்றும் பலருக்கு நிரந்தர மூளைச் பாதிப்பு ஏற்படும்.

கழுத்துச் சுரப்பிகளில் வீக்கமும் கடுமையான காய்ச்சலும் ஏற்படுத்தக் கூடிய தொற்றுநோயே **அம்மைக்கட்டு** ஆகும். பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 10 சதவீதமானோருக்கு மூளை மற்றும் முதுகெலும்புகளைச் சுற்றியுள்ள சவ்வுகளில் வீக்கம் (மூளைக்காய்ச்சல் அறிகுறிகள் மற்றும் நோய்க்குறிகள்) உருவாக்கும், அதே சமயம் 15-30 சதவீதமான பருவ வயதைத் தாண்டிய ஆண் பிள்ளைககளுக்கு விதை வீக்கம் (ஓர்க்கைட்டிஸ்) உருவாகும். கருத் தரித்த முதல் மூன்று மாதங்களில் ஏற்படும் அம்மைக்கட்டு காரணமாக தானாகவே ஏற்படும் கருச் சிதைவும் நிகழ வாய்ப்பு உண்டு.

காய்ச்சல், தோல் அரிப்பு மற்றும் சுரப்பிகளின் வீக்கம் ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் வைரஸ் தொற்று நோய் **ருபெல்லா** (ஜேர்மன் சின்னமுத்து) ஆகும். கர்ப்பிணிகள் இதனால் பீடிக்கப்பட்டால், பிறக்கும் குழந்தைகளில் இந்த நோய் மிகவும் கடுமையான குறைபாடுகளைத் தோற்றுவிக்கும். கர்ப்பம் தரித்த முதல் 3 மாதத்தினுள் இந்நோயிற்கு உட்பட்ட 90 வீதமான குழந்தைகளுக்கு அறிவுசார் இயலாமை உட்பட, செவிட்டுத் தன்மை, பார்வையின்மை மற்றும் பாரிய இருதய நோய்கள் போன்ற பிறவிக் குறைபாடுகள் இருக்கும்.

## கே. சின்னமுத்து, அம்மைக்கட்டு, ருபெல்லா நோய்கள் எவ்வாறு பரவுகின்றன?

இருமல், தும்மல் மூலமாக இந்த வைரஸ் கிருமிகள் பரவுகின்றன. மனிதர்களில் காணப்படும் தொற்று நோய்களில் மிக இலகுவாகப் பரவக் கூடியதாகும் சின்னமுத்து. இந்த நோயுடைய ஒருவர் இருக்கும் அறையில் இன்னொருவர் இருந்தால் அவருக்கும் இது தொற்றும்.

## கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

## கே. இத்தடுப்பு மருந்து எந்தளவு பயனளிக்கக் கூடியது?

சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா (MMR) தொற்றுவதிலிருந்து தடுப்பதில் இந்த முக்கூட்டு தடுப்பு மருந்து காத்திரமான பாதுகாப்பை வழங்குகிறது.

## கே. யாருக்கு நோய்த்தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்?

ஏற்கனவே இரண்டு தடுப்பு மருந்தேற்றங்கள் வழங்கப்பட்டிருந்தாலன்றி, பதின்ம வயதினருக்கு சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லாவிலிருந்து முழுமையான பாதுகாப்பைப் பெற சின்னமுத்து, அம்மைக்கட்டு மற்றும் ருபெல்லா (MMR) விற்கெதிரான இரண்டு வேளை தடுப்பு மருந்தேற்றங்கள் சிபார்சு செய்யப்படுகின்றன.

## கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

MMR தடுப்புமருந்து பின்வருவோருக்குக் கொடுக்கப்படக் கூடாது:

- முன்னர் முக்கூட்டு தடுப்பு மருந்து வழங்கப்பட்ட போது கடும் ஒவ்வாமைக்கு (அனபிலக்ஸிஸ்) உட்பட்டவர்கள்
- தடுப்பு மருந்தில் உள்ளடங்கியுள்ள கூறுகளில் ஏதாவது ஒன்றால் (கீழே பட்டியலிடப்பட்டுள்ளது) கடும் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமை ஏற்பட்டவர்கள்
- கர்ப்பிணிகள் (தடுப்பு மருந்தேற்றத்தில் இருந்து 28 நாட்களுக்கு கர்ப்பமாதல் தவிர்க்கப்பட வேண்டும்)
- கடந்த நான்கு வாரங்களுக்குள் சின்னமுத்து (சின்னம்மை) பீசீஜி (காச நோய்) அல்லது மஞ்சள் காய்ச்சல் போன்றவற்றிற்கான ஒரு ‘உயிர்த் தடுப்பு மருந்து’ பெற்றவர்.
- கடந்த வருடத்தில் இரத்த மாற்றுச் சிகிச்சை/ இம்முனோகுளோபிலின் ஊசிமருந்தேற்றம் பெற்றவர்கள்.
- நோய் எதிர்ப்புச் சக்தி பாதிக்கப்பட்டுள்ளவர் அதாவது:
  (i) எச்.ஐ.வி / எய்ட்ஸ் உள்ளவர்கள்
  (ii) அதிக அளவில் வாய்மூல கார்டிகோஸ்டிராயிடுகள் (corticosteroids) எடுப்பவர்கள்
  (iii) அதியளவியிலான நோய் எதிர்ப்புக் கட்டுப்பாட்டுச் சிகிச்சை அல்லது பொதுவான கதிர்வீச்சு அல்லது எக்ஸ்-ரே சிகிச்சை பெறுபவர்
  (iv) சுரப்பிப் புற்று, லுகேமியா எனப்படும் இரத்தப் புற்று மற்றும் ஹொட்ஜ்கின் வியாதி உட்பட புற்று விளைவிக்கும் நிலைகளால் பீடிக்கப்பட்டவர்கள்.

## கே. MMR தடுப்புமருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன?

MMR தடுப்பு மருந்தில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன: பாலிலுள்ள சர்க்கரை, நியோமய்சின், சோர்பிடோல் மற்றும் மனிடால். தடுப்புமருந்துகள் முறையாக செயல்படுவதற்காக அல்லது பழுதடையாதிருப்பதற்காக இந்த சேர்க்கைகள் மிகச் சிறிய அளவில் சேர்க்கப்பட்டுள்ளன.

## கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை ‘சிகிச்சை மருந்துகள் நிர்வாக’த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

## கே. MMR தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

முக்கூட்டு தடுப்பு மருந்துகள் பாதுகாப்பானவை, காத்திரமானவை மற்றும் சகிக்க இயலுமானவை. பொதுவான சுகயீனமும் காய்ச்சலுடன் சிலவேளை தோல் அரிப்பும் பொதுவான பக்க விளைவுகள் ஆகும் (இவை தொற்றக்கூடியவை அல்ல, MMR தடுப்பு மருந்தேற்றத்துக்குப் பிறகு 5 முதல் 12 நாட்களுள் இந்த நிலைகள் ஏற்படலாம்). அனபிலக்ஸிஸ் உட்பட கடும் ஒவ்வாமை (கீழேயுள்ள விபரங்களைப் பார்க்கவும்) உறுப்புகளில் வீக்கம் (lymphadenopathy) மூட்டு வலி (arthralgia) இரத்தக் கசிவுக்கான சாத்தியம் (thrombocytopenia) போன்ற பாரதூரமான பக்க விளைவுகள் எதுவும் ஏற்படும் சாத்தியம் மிக அரிதானது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய ‘நுகர்வோர் மருந்து தகவல்’ இல் கிடைக்கும்.

தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும். **ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது *மிக அரிதாக* ஏற்படுகின்றது.** பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

## கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர் / பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

**MMR தடுப்புமருந்து ஏற்றப்படும் மாணவிகள் அதிலிருந்து 28 நாட்கள் வரை கருவுறக் கூடாது.**

### கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் MMR தடுப்புமருந்து கொடுக்க முடியும்.

### கே. தடுப்பு மருந்தளிக்க யாரெல்லாம் இணக்கமளிக்க முடியும் மற்றும் இணக்கத்தினை மீளப்பெற முடியுமா?

18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு மருந்தளிக்கப்படுவதற்கான இணக்கத்தை பெற்றோர் / பாதுகாவலர்கள் மட்டுமே அளிக்க முடியும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தமக்குத் தடுப்பு மருந்தளிக்கத் தாமே இணக்கமளிக்கலாம், அத்தனுடன் இணைக்கப் படிவத்தைப் பூரணப் படுத்தி அதில் பெற்றோர் / பாதுகாவலர்' என்ற இடத்தில் கையொப்பமிட வேண்டும். இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

### கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி - www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

### கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்யவது?

உங்கள் உள்ளூர் வைத்தியரை அணுகி தடுப்பு மருந்தேற்றம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்க.

### கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின்  சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

### பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

September 2022 © NSW Ministry of Health. SHPN (HP NSW) 220731-1-22

## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே ‘ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்’ (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே ‘ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்’ (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**

NSW GOVERNMENT


220731-2-22

Tamil

# சின்னமுத்து, அம்மைக்கட்டு, ருபெல்லா முக்கூட்டு (MMR) தடுப்பு மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

### 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ __ / __ __ / 2 0 __ __

பால் ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/இன்டர்செக்ஸ்/குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

### 2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

### 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

சின்னமுத்து, அம்மைக்கட்டு, ருபெல்லா முக்கூட்டுத் தடுப்பு மருந்தின் (MMR) பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எனது பிள்ளைக்கு முக்கூட்டு தடுப்பு மருந்தினை (MMR) இரு முறை முறை பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ‘பெற்றோருக்கான தகவல்’ ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம்JOHN SMITH)

வீட்டு முகவரி(உ.ம்5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் ×

திகதி __ __ / __ __ / 2 0 __ __

மாதிரி படிவம்
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# முக்கூட்டு வக்சினேற்றப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்)

வக்சின் தொகுதி இலக்கம்

மருந்தினளவு 1

தாதியின் கையொப்பம்

×

திகதி / 2 0

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்)

வக்சின் தொகுதி இலக்கம்

மருந்தினளவு 2

தாதியின் கையொப்பம்

×

திகதி /

**தாதியின் குறிப்புகள்**

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

# **பெற்றோர்/பாதுகாவலர்** சின்னமுத்து, அம்மைக்கட்டு, ருபெல்லா முக்கூட்டு தடுப்பூசி வழங்கிய பதிவு

## முக்கூட்டு வக்சினேற்றப் பதிவு — மருந்தினளவு 1

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) :

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம்

×

திகதி / 2 0

## முக்கூட்டு வக்சினேற்றப் பதிவு — மருந்தினளவு 2

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) :

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம்

×

திகதி / 2 0

மாதிரி பிரதி
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# போலியோ தடுப்புமருந்து

Polio vaccine

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் 'தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்' இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

### உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட நீங்கள் விரும்புவதாயின் 'இணக்கப் படிவத்தைப்' பூரணப்படுத்திக் கையொப்பமிட்டு அப்படிவத்தை உங்கள் பிள்ளை ஊடாக பாடசாலைக்கு அனுப்பவும்.
- உங்கள் பிள்ளைக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் **விரும்புவதில்லை**யாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ **வேண்டாம்**.

## கே. போலியோ (இளம்பிள்ளை வாதம்) என்பது என்ன?

போலியோ என்பது போலியோவைரஸ் எனப்படும் நோய்க்கிருமியினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் தொற்று நோயாகும், இது முடக்குவாதத்தையும் மரணத்தையும் ஏற்படுத்தக் கூடியது. போலியோ தொற்றிற்கு உட்பட்ட அநேகரில் அதன் எவ்வித அறிகுறிகளும் தென்படாது. தொற்றிற்கு உட்பட்ட சுமார் 10 வீதமானோரில் காய்ச்சல், தலைவலி, சோம்பல், குமட்டல் மற்றும் வாந்தி என்பவற்றை ஏற்படுத்தும் சிறிதளவு உடல் நலமின்மை ஏற்படும். இவர்களில் அதிகமானோர் முழுமையாகக் குணமடையும் அதேவேளை, 2 வீதமானோர் மூளையின் உட்கவசத்தில் ஏற்படும் வீக்கத்தினால் தோற்றுவிக்கப்படும் முதுகில் அல்லது கழுத்தில் ஏற்படும் விறைப்புடன் கூடிய கடுமையான தசை நோயிற்கு உட்படுவர். தொற்றிற்கு உட்பட்டோரில் 1 வீதத்திற்கும் குறைவானோரில் தீவிர தசைத் தளர்ச்சி முடக்கு வாதம் (acute flaccid paralysis) என்றழைக்கப்படும் கடுமையான பலவீனம் ஏற்படும். இது கை கால்களையும் தலை மற்றும் கழுத்துத் தசைகளையும் சுவாசத்திற்குப் பயன்படும் தசைகளையும் பாதிக்கும்.

## கே. போலியோ எப்படிப் பரவுகிறது?

தொற்றிற்கு உட்பட்ட ஒருவருடன் ஏற்படும் நெருங்கிய தொடர்பு மூலம் அத்தகையவரது சிறிதளவு மலம் அல்லது எச்சில் படுவதன் மூலம் (உ.மாக, கழுவப்படாத கைகள்) போலியோ பரவுகிறது. வாய் அல்லது மூக்கின் ஊடாக போலியோ வைரஸ் உடலைச் சென்றடைவதுடன் குடலில் தொற்று ஆரம்பமாகிறது. பின்பு அது இரத்த ஓட்டத்தில் நுழைந்து நரம்பு மண்டலம் உட்பட ஏனைய உடற் பாகங்களுக்கும் சென்றடைகிறது. நோய்க்குறிகள் தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பும் தொடங்கிய 10 நாட்களின் பின்பும் பெரும்பாலும் இந்த நோய் தொற்றக்கூடியதாயிருக்கும்.

## கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

## கே. போலியோ தடுப்புமருந்து எந்தளவு பயனளிக்கக்கூடியது?

வரிசைக் கிராமமான ஆரம்ப 3 வேளை போலியோ தடுப்பு மருந்தானது குறைந்தது 99 வீதம் இந்நோயிற்கெதிரான தடுப்பை ஏற்படுத்தக்கூடியதாகும்.

## கே. யாருக்கு நோய்த்தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்?

வரிசைக் கிராமமான ஆரம்ப போலியோ தடுப்பு மருந்தை பெற்றிராத மாணவர்களுக்கு (குறைந்தது 4 வாரங்கள் இடைவெளியில் 3 முறை) தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் ஒரு முறையாவது போலியோ தடுப்பு மருந்து பெற்றிருப்பார்கள் என்பதால், துரித ஆங்கில வகுப்பு நிலையங்களில் 2 முறை வரைக்கும் அது வழங்கப்படும். தேவைப்படின் மூன்றாவது மருந்தளிப்பு முறைக்காக தமது உள்ளூர் வைத்தியரிடம் செல்லுமாறு பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.

## கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

போலியோ தடுப்புமருந்தைப் பின்வருவோருக்குக் கொடுக்கக்கூடாது:

- முன்னர் இத்தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட பின்னர் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள்
- ஏதாவது தடுப்புமருந்துக் கூறுகளால் அனபிலக்ஸிஸ் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள் (அடுத்த பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன)

## கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்கஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும்.

**ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது *மிக அரிதாக* ஏற்படுகின்றது.** பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

## கே. எனது பிள்ளைக்கு ஏற்கனவே போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டதா என எனக்கு நினைவில் இல்லையென்றிருந்தால் அல்லது அது பற்றிய பதிவும் இல்லையென்றிருந்தால் என்ன செய்வது?

ஏற்கனவே போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் பாதுகாப்பான முறையில் பிள்ளைகளுக்கும் வளர்ந்தோர்க்கும் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட முடியும்.

## கே. போலியோ தடுப்புமருந்துகள் என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளன?

தடுப்பு மருந்தில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன: 'ஃபினோக்ஸியெதனோல்', 'ஃபார்மால்டிஹைடு', 'போலிஸோபேட் 80' மற்றும் சிறிய அளவிலான 'நியோமைசின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' (நுண்ம எதிர்ப்புப்பொருள்), 'பாலிமிக்ஸின் B', 'மாட்டு இரத்த நிணநீர் புரதம்' (bovine serum albumin).

தடுப்புமருந்து செயற்படுவதற்கு உதவியாக அல்லது ஒரு பேணியாகச் செயற்படு வதற்காக இச்சேர்க்கைகள் சிறிய அளவில் உள்ளடக்கப்படுகின்றன.

உற்பத்தியின் போது இந்தத் தடுப்பூசி, மாட்டிறைச்சி நிணநீர் புரதம் (bovine) இலிருந்து பெறப்பட்ட பொருட்களோடு தொடர்புபட்டுள்ளது.

## கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக' த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

## கே. போலியோ தடுப்புமருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. வழமையாக ஊசிபோட்ட இடத்தில் தோல் சிவத்தல், வலி, வீக்கம் அல்லது காய்ச்சல் என்பன காணப்படும். தீவிரமான பக்க விளைவுகள் மிக அரிது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய 'நுகர்வோர் மருந்து தகவல்' இல் கிடைக்கும். தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர் / பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

## கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்மா நோய் உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் போலியோ தடுப்புமருந்து கொடுக்கக்கப்பட முடியும்.

## கே. தடுப்பு மருந்தளிக்க யாரெல்லாம் இணக்கமளிக்க முடியும் மற்றும் இணக்கத்தினை மீளப்பெற முடியுமா?

18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு மருந்தளிக்கப்படுவதற்கான இணக்கத்தை பெற்றோர் / பாதுகாவலர்கள் மட்டுமே அளிக்க முடியும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தமக்குத் தடுப்பு மருந்தளிக்கத் தாமே இணக்கமளிக்கலாம், அத்தனுடன் இணைக்கப் படிவத்தைப் பூரணப் படுத்தி அதில் பெற்றோர் / பாதுகாவலர்' என்ற இடத்தில் கையொப்பமிட வேண்டும். இணக்கத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறலாம். பாடசாலைக்கு எழுத்துமூலம் அறிவித்து அல்லது தொலைபேசியின் மூலம் இணக்கத்தை மீளப்பெறலாம்.

## கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி - www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

## கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்வது?

உங்கள் உள்ளூர் வைத்தியரை அணுகி தடுப்பு மருந்தேற்றம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்க.

## கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணைக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

## பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

September 2022 © NSW Ministry of Health. SHPN (HP NSW) 220732-1-22

## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**


## தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

## ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

**நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.**


220732-2-22

Tamil

# போலியோ மருந்தளிப்பிற்கான இணக்கம்

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

### 1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ __ / __ __ / 2 0 __ __

பால்: ஆண் / பெண் / உறுதியற்ற/இன்டர்செக்ஸ்/குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

### 2. பூர்வகுடியினர் தகுநிலை

இல்லை / ஆம். அபோரிஜினல் / ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி / ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

### 3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

போலியோ தடுப்பு மருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எனது பிள்ளைக்கு போலியோ தடுப்புமருந்தினை 2 முறை பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'பெற்றோருக்கான தகவல்' ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம்JOHN SMITH)

வீட்டு முகவரி(உ.ம்5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உதா.உ02)

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் ×

திகதி __ __ / __ __ / 2 0 __ __

மாதிரி மட்டுமே
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# போலியோ தடுப்புமருந்துப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** இடது / வலது — தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) — வக்சின் தொகுதி இலக்கம் — மருந்தினளவு 1

தாதியின் கையொப்பம் — திகதி __ __ / __ __ 2 0 __ __

**புயம்** இடது / வலது — தடுப்பூசி ஏற்றிய நேரம் (24மணி நேரம்) — வக்சின் தொகுதி இலக்கம் — மருந்தினளவு 2

தாதியின் கையொப்பம் ✕ — திகதி __ __ / __ __ 2 0 __ __

**தாதியின் குறிப்புகள்**

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

# **பெற்றோர்/பாதுகாவலர்** போலியோ தடுப்புமருந்துப் பதிவு

## போலியோ தடுப்புமருந்துப் பதிவு — மருந்தினளவு 1

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** இடது / வலது — தடுப்பூசி ஏற்றிய நேரம் (24மணி நேரம்) __ __ : __ __ — வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕ — திகதி __ __ / __ __ 2 0 __ __

## போலியோ தடுப்புமருந்துப் பதிவு — மருந்தினளவு 2

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

**மாணவரின் பெயர்** (உ.ம். JANE SMITH)

அலுவலக பாவனைக்கு மட்டும்

**புயம்** இடது / வலது — தடுப்பூசி ஏற்றிய நேரம் (24மணி நேரம்) __ __ : __ __ — வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ✕ — திகதி __ __ / __ __ 2 0 __ __

மாதிரி மட்டுமே சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

# தகவல் பாதுகாப்பு பிரகடனம்

## எமது கடப்பாடுகள்

அந்தரங்கப் பாதுகாப்புச் சட்டத்திற்கேற்ப உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதில் நாம் உறுதியாயுள்ளோம்.

உங்களைப் பற்றியும் உங்கள் பிள்ளையைப் பற்றியுமான தனிப்பட்ட தகவல்களை நாம் எவ்வாறு, எதற்காக சேகரிக்கின்றோம்; உங்களது தகவல்களை நீங்கள் எவ்வாறு அணுகலாம்; NSW பொது சுகாதார சேவையில் உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் மற்றும் பிற அமைப்புகளுக்கு வெளிப்படுத்தப்படும் என்பவற்றை இக் கூற்று விளக்குகிறது. உங்களதும் உங்கள் பிள்ளையினதும் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் உங்கள் பிள்ளையின் தடுப்பு மருந்தேற்றம் சம்பந்தமான தனிப்பட்ட ஆரோக்கிய தகவல்களையும் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் உள்ளடக்கி இருக்கும்.

## சேகரிப்பு

உங்கள் பிள்ளைக்குத் தகுந்த நோய்த்தடுப்புச் சேவையை வழங்குவதற்கு ஏதுவாகவே தனிப்பட்ட விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

உங்கள் பிள்ளையின் தடுப்பு மருந்தேற்றத்துக்கும் நோய்த் தடுப்பேற்பு சேவைகளை நிரிவகிக்கவும் தேவையான, பொருத்தமான, அத்தியாவசிய தகவல்கள் மட்டுமே சேகரிக்கப்படுகின்றன.

முடிந்தளவுக்கு உங்களிடமும் உங்கள் பிள்ளையிடமும் இருந்து நேரடியாக தகவல்கள் திரட்டப்படுகின்றன. உங்கள் பிள்ளையின் பள்ளிக் கூடத்திலிருந்தும் உங்கள் பிள்ளைக்கு சிகிச்சை வழங்கிய வைத்திய நிபுணர்களிடமிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்படலாம். அவசரத் தேவையின் போது உங்கள் பிள்ளை பற்றிய தகவல்கள் குடும்ப உறுப்பினர், நண்பர், கவனிப்பாளர் அல்லது உங்கள் பிள்ளையை நன்கு பராமரிக்க உதவக் கூடிய மற்றொருவரிடம் இருந்தும் பெறப்படலாம்.

## சேகரிக்கப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு

தனிப்பட்ட விபரங்கள் பல்வேறு முறைகளில் பாதுகாத்து வைக்கப்படலாம். பொதுவாக, தகவல்கள் அச்சிடப்பட்ட தாள்களாகவும் / அல்லது இலத்திரனியல் மருத்துவப் பதிவுகளாகவும் மிகப் பாதுகாப்பான கணணித் தரவுகளாகவோ பேணப்படும். உங்களது தனிப்பட்ட தகவல்கள் தொலைந்து விடாதிருக்கவும் சட்டவிரோதமான விதத்தில் அணுகப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுதலைப் தடுக்கும் விதத்திலும் அவற்றை சகல வடிவங்களிலும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவது தொடர்பாக கண்டிப்பான சட்ட விதிகளையும் நடத்தைக் கொள்கைகளையும் நாங்கள் பின்பற்றுகிறோம்.

## பயன்படுத்தலும் வெளிப்படுத்தலும்

உங்களுக்குப் பொருத்தமான கவனிப்பும் சிகிச்சையும் வழங்கப்படுவதற்காக உங்களது அல்லது உங்கள் குழந்தையினது தனிப்பட்ட தகவல்கள் NSW பொது சுகாதார சேவையால் பயன்படுத்தப்படலாம் அல்லது சுகாதார சேவைக்கு வெளியில் வெளிப்படுத்தப்படலாம். உதாரணமாக, உங்களுடைய தகவல் உங்கள் GP-இற்கு, உங்கள் பிள்ளையின் GP-இற்கு, மற்றொரு சிகிச்சையளிக்கும் சுகாதார சேவைக்கு அல்லது மருத்துவமனைக்கு, NSW ஆம்புலன்ஸ் சேவைக்கு, பரிந்துரைக்காக ஒரு நிபுணருக்கு வெளிப்படுத்தப்படலாம்.அல்லது நோயியல் சோதனைகளுக்காகப் பயன்படுத்தலாம் அல்லது NSW சுகாதார சேவைகளின் செயல்முறைகள் மற்றும் எமது நோயாளிகளின் சிகிச்சை, நிதியளிப்பு, திட்டமிடல், பாதுகாப்பு, மற்றும் தர மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய செயற்பாடு தொடர்பான நோக்கங்களுக்காகவும் தனிப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படலாம் அல்லது வெளிப்படுத்தப்படலாம்.

குறிப்பிடத்தக்க நோய்களைப் பற்றி புகார் தெரிவிக்கும் சட்டங்களுக்கு இயைபாக மாநில மற்றும் காமன்வெல்த் அரச முகவர் நிறுவனங்களுக்கும், தகவல்கள் மற்றும் நோய்த் தடுப்புப் புள்ளிவிவரங்களை வழங்குவதற்காக 'மெடிகேய'ருக்கும் தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்படவேண்டியது கட்டாயம்.

வாடிக்கையாளர் திருப்தி ஆய்வுகள் மற்றும் தடுப்பு மருந்தேற்றல் பாதுகாப்பைக் கண்காணித்தல் தொடர்பாக உங்களைத் தொடர்புகொள்ளவும் உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பயன்படுத்தலாம். இந்த ஆய்வுகளில் பங்கேற்பது சுய விருப்பின்பாற்பட்டதாகும் மேலும் பங்கேற்காமை உங்களுக்கு வழங்கப்படும் சுகாதாரக் கவனிப்பைப் பாதிக்காது.

## உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் பெறல்

நமது பராமரிப்பில் பாதுகாக்கப்படும் உங்களதும் உங்கள் பிள்ளையினதும் விபரங்களைப் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள். உங்களது தனிப்பட்ட விபரங்கள் அல்லது மருத்துவப் பதிவுகளின் பிரதிகள் வேண்டுமென நீங்கள் கேட்டால், உங்களிடம் கட்டணம் அறவிடப்படலாம்.

## மேலதிக தகவல்களுக்காகவும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறன என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து 'சுகாதார தகவலுக்கான NSW சுகாதார அந்தரங்கப் பாதுகாப்புக் கையேட்'டைப் பார்க்கவும் www.health.nsw.gov.au/patients/privacy

உங்களது விபரங்களின் இரகசியத் தன்மை சம்பந்தமாக வினா அல்லது முறைப்பாடு உள்ளதாயின் தயவு செய்து 1300 066 055 இலக்கத்தில் உங்கள் உள்ளூர் சுகாதார சேவை அலகைத் தொடர்பு கொள்ளவும்.

October 2022 © NSW Health. SHPN (HP NSW) 220726-P-22